**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பட்டுக்கோட்டை**

**அசல் வழக்கு எண்.** 9/2018

2024 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 12 ம் நாள் செவ்வாய் கிழமை வாதிகள் தரப்பு சாட்சியாகிய CW1 வது நபரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 வது விதியில் 9 வது பிரிவின் படி) பெஞ்ச்கிளார்க் கிரேடு 3 செல்வி.S.கௌசல்யா என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர் :** | **அறிவரசி** | **தொழில் :** | வழக்கறிஞர் |
| **தந்தை/கணவர் பெயர் :** | சேக்கிழர்நம்பி | **சமயம் :** | இந்து |
| **ஊர் :** | தாமரங்கோட்டை | **வயது** | 31 |
| **தாலுக்கா :** | பட்டுக்கோட்டை | | - |

**12.11.2024**

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர். நான் இந்த வழக்கு சொத்தை பொறுத்து இரண்டு முறை ஆணையராக நியமிக்கப்பட்டு என்னுடைய அறிக்கையை இரண்டு மனுக்களிலும் தாக்கல் செய்துள்ளேன். முதல் நீதிமன்ற ஆணையர் மனு வாதி தரப்பால் தாக்கல் செய்யப்பட்டு அதன் பேரில் நான் கொடுத்த அறிக்கை ஏற்கனவே நீ.ம.சா.1 மற்றும் 2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மீண்டும் பிரதிவாதி தரப்பில் நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டு நான் அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் அந்த அறிக்கை நீ.ம.சா.3 முதல் வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**பிரதிவாதிகள் தரப்பு குறிப்பு விசாரணை**

முதல் நீதிமன்ற ஆணையர் மனு ஒருதலைபட்சமாக நியமிக்கப்பட்டது என்றால் ஆமாம். வழக்கு தாக்கல் செய்யப்பட்ட தேதி தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு முதல் நீதிமன்ற ஆணையர் வாரண்ட் எப்போது கொடுக்கப்பட்டது என்றால் 05.01.2018. வழக்கு தாக்கல் செய்யப்பட்ட தேதி 05.01.2018 என்றால் தெரியாது. எனக்கு வாரண்ட் போடப்பட்டதை நான் எப்படி தெரிந்துக்கொண்டேன் என்றால் திறந்த நீதிமனற்த்தில் இருந்த ஜீனியரை கேட்டு என்னை நியமித்தார்கள். முதன் முதலில் எப்போது வழக்கு சொத்தை பார்வையிட்டேன் என்றால் 06.01.2018. எதிர்வாதிக்கு அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் ஆமாம். எமர்ஜெண்டாக வழக்கு பதிவு செய்து அன்றே உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. வாதி வழக்கு சொத்தை எனக்கு அடையாளம் காட்டினார் என்றால் ஆமாம்., பிரதிவாதிகளும் அங்கு இருந்தார்கள். அவர்களிடம் அறிவிப்பு ஏதும் கொடுக்கவில்லை என்றால் ஆமாம். பிரதிவாதிகள் யார் யார் இருந்தார்கள் என்று குறிப்பிட்டு பெயர் சொல்லவில்லை என்றால் ஆமாம். அதனால் பிரதிவாதிகள் தெரியாது என்றால் நான் மனுவில் பெயர் தெரிந்துக்கொண்டேன் அதில் யார் என்று நான் தெரிந்துக்கொள்ளவில்லை. எனது முதல் அறிக்கையில் 6 வது பாராவில் தாவா சொத்தில் வடமேற்கு மூளையில் சுமார் 10.6 அடி நீளமும், சுமார் 5.8 அடி அகலமும் , சுமார் 5 அடி ஆழம் கொண்ட செங்கல் கல்லால் கட்டப்பட்ட பூமிக்குள் ஒரு தொட்டி கட்டப்பட்டிருந்தது என்றால் ஆமாம். அந்த தொட்டி ஏ,பி தாய் சுவற்றிலிருந்து 1.8 அடி தூரம் தென்புறமாகவும், மேல்புறம் காபொண்ட் சுவற்றிலிருந்து 1.8 அடி கீழ்புறமாகவும் இருந்தது என்றால் ஆமாம். எதிர்வாதியின் தாய் சுவாற்றிக்கு தென்புறத்தில் காபொண்ட் சுவர் உள்ளதா என்றால் இல்லை.

எதிர்வாதியின் தாய் சுவாற்றிக்கு தென்புறத்தில் சன்-சேடு உள்ளதா என்றால் ஆமாம். 3 அடி என்று தோராயமாகதான் போட்டுள்ளேன். தாய் சுவற்றிலிருந்து தொட்டி விளிம்பு வரை 1.8 அடி என்றால் ஆமாம். 5 அடி தொட்டி உள்ளே முழுவதுமாக பூசப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அந்த தொட்டி ஏற்கனவே இருந்த தொட்டையை விரிவுபடுத்தி கட்டியுள்ளார்களா அல்லது புதிதாக கட்டியுள்ளார்களா என்றால் புதிதாகதான் கட்டப்பட்டுள்ளது. தொட்டியின் அளவை அளவை கருவியால் அளக்கவில்லை என்றால் ஆமாம். நான் தப்படி (காலால்) அளந்து எழுதிக்கொண்டேன். நான் குறிப்பாக தப்படி போட்டு அளந்ததை அறிக்கையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த 2 வது அறிக்கையில் நான் தனியாக வரைபடம் தாக்கல் செய்துள்ளேன், சர்வேயர் 2 வரைபடம் தாக்கல் செய்துள்ளார் என்றால் ஆமாம். புல எண்.317/6 சர்வேயர் வரைபடத்தில் எங்கு உள்ளது என்று சொல்லமுடியுமா என்றால் சொல்லமுடியும். நான் தாக்கல் செய்துள்ள வரைபடத்தில் முக்கோணவடிவில் உள்ள இடம் எந்த சர்வே எண்ணில் வருகிறது என்றால் புல எண்.317/6 ல் வருகிறது. புல எண்.317/6 யாருக்கு சொந்தமான சொத்து என்றால் ஆவணங்கள் நான் பார்வையிடவில்லை. ஆனால் பிரதிவாதிக்கு சொந்தமானது. VAO வைத்திருந்த அடங்களை பார்த்தேன். 2 வது அறிக்கையில் புல எண்.317/6 ல் தான் செப்டிக்டேங் கட்டப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. எனது அறிக்கையில் 2 வது பக்கத்தில் முக்கோணமாக சொல்லப்பட்ட பகுதி வாதியால் அனுபவம் செய்யப்பட்டு வந்த நிலையில் தற்போது செப்டிக்டேங் கட்டி எதிர்வாதி வீட்டிலிருந்து செப்டிக்டேங்கிற்கு இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது என்று

சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். வாதி அனுபவம் செய்து வந்ததற்கு என்ன ஆவணம் பார்த்தேன் என்றால் ஆவணங்கள் பார்க்கவில்லை. எனது அறிக்கையில் முக்கோணபகுதியை வாதி ஆக்கிரமித்து அனுவம் செய்துவருகிறார் என்று அறியமுடிகிறது என்று எதன் அடிப்படையில் சொல்லியுள்ளேன் என்றால் எனது முதல் அறிக்கையின் அடிப்படையில் சொல்லியுள்ளேன். வாதி ஆக்கிரமிக்கவில்லை அந்த முக்கோணபகுதி பிரதிவாதிகளின் அனுபவத்தில்தான் வழக்கிற்கு முன்பிலிருந்து வருகிறது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. முதல் அறிக்கையின் வரைபடத்தில் தென்புறத்தில் H.I என்று குறிப்பிட்ட இடத்தில் தற்காலிகமாக முள்கம்பி வேலி போடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். H.I வழியிலிருந்து தென்புற ரோட்டிற்கு போகலாம் என்றால் போகலாம். AJ பகுதியில் Gate என்று குறிப்பிட்டுள்ளேன் அந்த Gate யை 2 வது முறை அளக்கும்போது முக்கோணபகுதிக்குள் வருகிறது என்றால் ஆமாம்.

**வாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதின்பேரில் குறிக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

*Taken down by the typist to my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him/her to be Correct.*

Sd/- S.Kavipriya,,B.A.,L.L.B.,

District Munsif, Pattukkottai.